06.09.2024 MCOP NO.47/2021

சாட்சி : PW 1 பூமணி

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை :** (2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர்)

விபத்து நடந்த இடம் 4 ரோடு சந்திப்பு. நான் என் கணவரோடு அவருக்குச் சொந்தமான TVS XL வண்டியில் தெற்கிலிருந்து வடக்காக சென்றேன். என்னை மோதிய வாகனம் கிழக்கிலிருந்து மேற்காக வந்தது. என் கணவர் தலைக்கவசம் அணியவில்லை. இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு உரிய ஓட்டுநர் உரிமம் அவருக்கு இல்லை. நான் இந்த விபத்து நடந்தவுடன் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற்றேன். தற்சமயம் விவசாய வேலைதான் பார்த்து வருகிறேன். எனக்கு விபத்தின் காரணமாக ஏற்பட்ட காயங்கள் குணமாகிவிட்டன. ஆனால், கணமான வேலைகள் பார்க்கமுடியாது. நான் பல்வேறு தலைப்புகளின் கீழ் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகமானது என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் தலைக்கவசம் அணியாமலும், ஓட்டுநர் உரிமம் இல்லாமலும் இருசக்கர வாகனத்தை ஓட்டியதால், 2ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எந்த இழப்பீடும் தரத் தேவையில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து என் கணவரின் கவணக்குறைவால் என்பதால் எனக்கு எந்த இழப்பீடும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் காயத்தின் தன்மையை மிகைப்படுத்தி கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

(ஒம்)- திரு.மு.வீரணன் M.A., L.L.M.,
சார்பு நீதிபதி,
தேவகோட்டை.